Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 13, 2023

புதன்கிழமை செப்டெம்பர் 13, 2023 | ஒளி: 09 கதிர்: 083 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## மின்சார வாகனங்களுக்கு சுங்கக் கட்டணம் இல்லை



மீள்வலுவூட்டக் கூடிய (ரீசார்ஜ்) மின்சார வாகனங்களை சுங்க கட்டணம் இன்றி இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி, 30 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு மிகாமல் புதிய மின்சார வாகனங்களை நாட்டிற்கு இறக்குமதி செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2

# பயணியின் மரணத்துக்கு ஊழியர்களே பொறுப்பு

### அமைச்சர் பந்துல குற்றச்சாட்டு



ஹொரபேயில் செவ்வாய்க்கிழமை (12) காலை நெரிசல் மிக்க ரயிலில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்த பயணியின் மரணத்திற்கு 84 ரயில் ஊழியர்களே நேரடிப் பொறுப்பு என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன குற்றம் சுமத்தினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (12 இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

நள்ளிரவு முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள 84 ஊழியர்களின் சுயநல செயற்பாட்டினால் துரதிஷ்டவசமாக இளைஞன் உயிரை பணயம் வைக்க நேரிட்டதாக குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# ரயிலின் கூரையில் இருந்து விழுந்து இளைஞர் மரணம்

கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலின் கூரையில் இருந்து பயணித்த இளைஞர் ஒருவர் ஹொரேப் ரயில் நிலையத்தின் மேற்கூரையில் மோதி ரயிலில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை (13) காலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 20 வயதான இளைஞர் ஒருவரே உயிரழந்துள்ளார்.

லோகோமோட்டிவ் சாரதிகள் சங்கம், திங்கள் (12) நள்ளிரவு முதல் முன்னெடுத்த வேலை நிறுத்தம் காரணமாக ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. செவ்வாயன்று காலை குறைந்தது 36 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டன.

ரம்புக்கனை, சிலாபம், களுத்துறை அளுத்கம, பாணந்துறை, பாதுக்க மற்றும் கொஸ்கம ஆகிய இடங்களில் இருந்து கொழும்பு நோக்கி புறப்படும் பல ரயில்கள் இரத்து செய்யப்பட்டன.

மேலும், வேலை நிறுத்த நடவடிக்கை காரணமாக கொழும்பில் இருந்து புறப்படும் சில




ரயில்களும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

கடுமையான ஆட்சேர்ப்பு நடைமுறையை அமல்படுத்தாதது, பதவி உயர்வு உள்ளிட்ட பிரச்னைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து லோகோமோட்டிவ் சாரதிகள் சங்க உறுப்பினர்கள் நள்ளிரவு முதல் கடமைகளில் இருந்து விலகுவதாக அதிகாரிகளுக்கு அறிவித்ததாக தொழிற்சங்கம் தெரிவித்திருந்தது.

### முரளியின் ‘800’ இல் இருந்து

## சர்ச்சை சொல்லை நீக்குவதாக உறுதி





இலங்கை பந்துவீச்சாளரான முத்தையா முரளிதரனின் வாழ்க்கை படமான ‘800’ இல் இருந்து சர்ச்சைக்குரிய சொல்லை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அத்திரைப்படத்தின் இயக்குநரான எம்.எஸ்.ஸ்ரீபதி தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமையவே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன்,

தொடர்ச்சி P2

## வைத்தியர்களால் சாத்வீக போராட்டம் முன்னெடுப்பு



வைத்தியர்கள் நாட்டை விட்டுச் செல்கின்றமையினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் தீர்வொன்றைப் பெற்றுத்தருமாறு கோரி நாடளாவிய ரீதியில் வைத்தியர்களால் செவ்வாய்க்கிழமை (13) சாத்வீக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் பல்வேறு மாவட்டங்களிலும் அமைந்துள்ள வைத்தியசாலைகளில் நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 02 மணி வரை இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

தொடர்ச்சி P2

## ரயில் சேவை அத்தியாவசியமானது



ரயில் சேவை செவ்வாய்க்கிழமை (12) நள்ளிரவு முதல் அத்தியாவசிய சேவையாக மாற்றப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன், இது தொடர்பான பிரேரணை ஜனாதிபதியிடம் முன்வைக்கவுள்ளதாக அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் கூறினார்.

எனவே, புதன்கிழமை (13) முதல் மக்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் தவிர்க்கப்படும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ரயிலில் இருந்து தவறி விழுந்த பாடசாலை மாணவர் உயிரிழந்தமைக்கு இரங்கல் தெரிவித்த அமைச்சர்,

தொடர்ச்சி P2



## ‘டேனி’ புயலுக்கு 3,000 பேர் பலி

முழுச் செய்தி P6

### போதைப் பொருளை கட்டுப்படுத்த

## உணர்வு ரீதியான செயற்பாடுகளை அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும்



போதைப் பொருள் பாவனை என்பது இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி வருகின்றமையினால், அதனைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் அதிகாரிகள் உணர்வு ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தினார்

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை மற்றும் பரவலை கட்டுப்படுத்துவதற்கு மாவட்ட மட்டத்திலான குழு ஒன்றினை அமைத்து இணைந்த நடவடிக்கையினை மேற்கொள்ளவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ் மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (12) நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## தலைமைக்கு தகுதியானால் தயாசிறி நியமிக்கப்படுவார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவிக்கு தகுதியானவர் என்று கருதப்பட்டால், தயாசிறி ஜயசேகர எம்.பியை உரிய நேரத்தில் நியமிக்கும் வாய்ப்பு இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

திங்கட்கிழமை (11) மாலை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் போதே, கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும், உறுப்பினர் பதவியிலிருந்தும் தயாசிறி ஜயசேகர நீக்கப்பட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## 3 மருத்துவக் கல்லூரிகளுக்கு அமைச்சரவை அங்கிகாரம்

தற்போதுள்ள மருத்துவ பீடங்களின் தரத்துக்கு அமைவாக இலங்கையில் மூன்று தனியார் மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## தேசிய மகளிர் ஆணைக்குழு அமைக்க பச்சைக் கொடி

தேசிய மகளிர் ஆணைக்குழுவை அமைக்கும் நோக்கத்துக்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டு, பெண்கள், சிறுவர்கள் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராக ஜனாதிபதியினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட மூலத்துக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

பெண்களின் உரிமைகளுக்கான தலைமைத்துவம் மற்றும் பால்நிலை சமத்துவம் தொடர்பான நடவடிக்கைகளுக்காக தேசிய மகளிர் ஆணைக்குழு என்ற பெயரில் ஒரு சுயாதீன ஆணைக்குழுவை உருவாக்குவதற்கு,

தொடர்ச்சி P2

## ஆயுதத்தை அபரிக்க முயற்சி: விசேட விசாரணை ஆரம்பம்



பொலிஸ் விசேட அதிரடிப்படையின் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவருக்கு வழங்கப்பட்ட சேவை ஆயுதத்தை பாதாள உலக குழுவைச் சேர்ந்த ‘ஹரக் கட்டா’ எனப்படும் நந்துன் சிந்தக கைப்பற்ற முயற்சித்ததை அடுத்து பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் புலனாய்வுப் பிரிவினரால் ஞாயிற்றுக்கிழமை (10) விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட வேளையில், சேவை ஆயுதத்தை அவர் அபகரிக்க முயன்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த அதிரடிப்படை உத்தியோகத்தர் ஆயுத அபகரிப்பு முயற்சியையும், தப்பிக்கும் முயற்சியையும் தடுத்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தேக நபரின் விவரங்களுக்கு நியமிக்கப்பட்ட ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் சம்பவத்தின் பின்னர் காணாமல் போனதாக முறைப்பாடு வழங்கப்பட்டுள்ள நிலையில்,

தொடர்ச்சி P2

## மாணவன் பாலியல் துஷ்பிரயோகம்; அதிபருக்கு 7 ஆண்டுகள் சிறை

பதின்ம வயது மாணவனை பாரதூரமான முறையில் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்திய பாடசாலை அதிபருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம். மிஹால் தீர்ப்பளித்தார்.

“தனது கட்டுகாவலில் உள்ள மாணவர்களுக்கு பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்குவது பாரதூரமான குற்றமாகும். தற்போது அதிகரித்து வரும் இத்தகைய செயற்பாடுகளுக்கு கடும் தண்டனை வழங்கப்படுவது அவசியம்.” என்று மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம்.மிஹால் தீர்ப்பில் கோடிட்டு காட்டினார்.

மன்னார் பாடசாலையில் கற்ற 10 வயது மாணவனை 2014ஆம் ஆண்டு செப்டெம்பர் 23ஆம் திகதி பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மாணவன் கல்வி கற்ற பாடசாலை அதிபர் கைது செய்யப்பட்டார்.

மன்னார் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற சுருக்க முறையற்ற விசாரணைகளின் பின் சட்ட மா அதிபரினால் மன்னார் மேல் நீதிமன்றில் பாடசாலை அதிபருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம். மிஹால் முன்னிலையில் விளக்கம் இடம்பெற்ற நிலையில் திங்கட்கிழமை (11) வழக்கு தீர்ப்புக்காக நியமிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பயணியின் மரணத்துக்கு ஊழியர்களே பொறுப்பு

## அமைச்சர் பந்துல குற்றச்சாட்டு

ஏறக்குறைய 18 ஆயிரம் ஊழியர்கள் தமது கடமைகளில் ஈடுபட்டுள்ள நிலையில், அரசியல் அல்லது சுயநல நோக்கங்களுக்காக 84 ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்வதற்கு தன்னிச்சையான முடிவை எடுத்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

நூற்றுக்கணக்கான பயணிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் பணிப் புறக்கணிப்புகளை மேற்கொள்ளும் முன்னர் பேச்சுவார்த்தை நடத்துமாறு ரயில்வே ஊழியர்களுக்கு பல தடவைகள் அறிவித்துள்ளதாக கூறினார்.

இலங்கை ரயில்வே திணைக்கள பொது முகாமையாளருடன் அனைத்து பிரச்சினைகளையும் கலந்துரையாடுமாறும், அது தோல்வியுற்றால் போக்குவரத்து அமைச்சின் செயலாளரை சந்திக்குமாறும் தொழிலாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

அந்த முயற்சியும் பலனளிக்கவில்லை என்றால், தன்னை சந்திக்குமாறு ரயில்வே ஊழியர்களுக்கு அறிவித்துள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர், ரயில்வே ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கான அமைச்சரவை உபகுழு உறுப்பினர்களுடன் கூட்டமொன்று இன்றையதினம் (13) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

கூட்டமொன்று திட்டமிடப்பட்ட போதிலும், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நள்ளிரவு முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு தொழிலாளர்கள் குழு தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர், மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு இடையூறாக நீண்ட தூர ரயில்களின் சேவைகளை வேலைநிறுத்தம் பாதித்துள்ளதாக கூறினார்.

## மின்சார வாகனங்களுக்கு சுங்கக் கட்டணம் இல்லை

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு, திங்கட்கிழமை (11) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய முதலீடுகளை ஈர்க்கும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. திட்டங்களின் கீழ் பல்வேறு முதலீடுகளை ஈர்க்கும் முயற்சியில் அங்கீகரிக்கப்பட்ட, தேவையான அளவுகோல்களை பூர்த்தி செய்யும் திட்டங்களுக்கான காப்பீடு மற்றும் கப்பல் கட்டணங்களும் விலக்கில் சேர்க்கப்படும் என முன்மொழியப்பட்ட யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மின்சார வாகனங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் நோக்கில் தொடர்புடைய முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

## ரயில் சேவை அத்தியாவசியமானது

அரசாங்க தகவல் திணைக்களத்தில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டை ஆரம்பிக்கும் முன்னர் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினார்.

இதில் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்னவும் கலந்துகொண்டார்.


## தலைமைக்கு தகுதியானால் தயாசிறி நியமிக்கப்படுவார்

மேலும், கட்சியின் பொதுச் செயலாளரான தயாசிறி ஜயசேகர நீக்கப்பட்டதையடுத்து, அந்தப் பதவிக்கு பதிலாக சாரதி துஷ்மந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகரவின் கட்சி உறுப்புரிமை செப்டம்பர் மாதம் 05 ஆம் திகதி இடைநிறுத்தப்பட்டதுடன், கட்சியின் யாப்பை மீறியமைக்காக அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்.

அவரின் கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநீக்கம் தற்காலிகமானது மட்டுமே என்றும், மீண்டும் கட்சி உறுப்பினராக இருப்பதை ஏற்றுக்கொள்ள சுதந்திரக் கட்சி தயாராக இருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி சிறிசேன குறிப்பிட்டிருந்தார்.

## சர்ச்சை சொல்லை நீக்குவதாக உறுதி




இது குறித்து அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

'800' படத்தின் முன்னோட்டம் அண்மையில் வெளியானது, இதில் நடிகர் நாசரால் 'தோட்டக்காட்டான்' என்ற வசனம் உச்சரிக்கப்படுகின்றது. இந்த வசனத்துக்கு மலையக தமிழர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு வலுத்தது. தமது சமூகத்தை கொச்சைப்படுத்தும் வகையில் அமைந்துள்ள இந்த வசனம் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்தது.

மனோ கணேசன் எம். பியும் குறித்த சொல் குறித்து தனது கடும் எதிர்ப்பை தெரிவித்திருந்த நிலையில் '800' முன்னோட்டத்தில் உள்ள இந்த வசனத்தை மாற்றியமைக்குமாறு மக்கள் சார்பில் படத்தின் இயக்குநரிடம் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, '800' திரைப்படத்தில் அந்த வசனம் நீக்கப்படும் என்ற உத்தரவாதம், எழுத்துமூலம் வழங்கப்பட்டுள்ளது.

## வைத்தியர்களால் சாத்வீக போராட்டம் முன்னெடுப்பு



வைத்தியசாலைகளின் சிகிச்சை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர், வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

கராபிட்டிய போதனா வைத்தியசாலை, அனுராதபுரம் போதனா வைத்தியசாலை, இரத்தினபுரி போதனா வைத்தியசாலை உட்பட பல மாவட்ட, ஆதார, பொது வைத்தியசாலைகளில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## உணர்வு ரீதியான செயற்பாடுகளை அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும்



அரசாங்க அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், பொலிஸார், மற்றும் பாதுகாப்பு தரப்பினர் உள்ளடக்கப்பட்டுள்ள குறித்த குழுவின் ஊடாக தகவல்களை பரிமாறி நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு நிலையம் அமைப்பது தொடர்பாகவும் அவதானம் செலுத்தினார்.

இக்கலந்துரையாடலில், யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வனவளப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

மேலும், சட்ட விரோத மணல் அகழ்வினை கட்டுப்படுத்தல், ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்துவது உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இக்கலந்துரையாடலில், மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், சுகாதார தரப்பினர் உட்பட்ட அரச அதிகாரிகள் மற்றுமா பொலிஸ் மற்றும் பாதுகாப்பு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

## தேசிய மகளிர் ஆணைக்குழு அமைக்க பச்சைக் கொடி

அமைச்சர்கள் அமைச்சரவையின் ஒப்புதல் முன்னர் வழங்கப்பட்டது.

2022ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் திகதி அன்று நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டும் நோக்கத்துடன் அத்தியாவசிய சட்ட நடவடிக்கைகளை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்ட சட்டமூலத்தை தயாரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

அந்த சட்டமூலம் ஜனாதிபதியினால், திங்கட்கிழமை (11) அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், கொள்கை ரீதியான உடன்பாட்டை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு சமூகமயமாக்கலின் பாலின வேறுபாட்டைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அரசாங்க தகவல் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

## ஆயுதத்தை அபரிக்க முயற்சி: விசேட விசாரணை ஆரம்பம்



பயங்கரவாத தடுப்புப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் தலைமையிலான புலனாய்வாளர்கள் குழுவொன்றை மேற்பார்வையிட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நந்துன் சிந்தக (ஹரக் கட்டா), செல்லப்பெருமகே சலிந்து மதுஷங்க (குடு சலிந்து), மற்றும் டி. அமில பெர்னாண்டோ ஆகிய பாதாள உலகக் குழு உறுப்பினர்களை மேலும் 90 நாட்களுக்கு தடுத்து வைத்து விசாரிக்க, நீதிமன்றம் திங்கட்கிழமை (11) அனுமதி வழங்கியது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விதிகளின் கீழ், சந்தேகநபர்களை மேலும் 90 நாட்களுக்கு தடுத்து வைத்து விசாரிக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

## மாணவன் பாலியல் துஷ்பிரயோகம்; அதிபருக்கு 7 ஆண்டுகள் சிறை

எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் நிகழ்வு, நிபுணத்துவ சாட்சியங்கள் ஊடாக நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் வழக்குத் தொடுநரினால் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளியாக இனங்கண்டல் நீதிமன்றம் குற்றவாளிக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. அந்த தொகையை செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும். பாதிக்கப்பட்ட மாணவனுக்கு ஒரு இலட்சம்

> **வழக்குத் தொடுநர் சார்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி செஸான் மஹ்பூம் வழக்கை நெறிப்படுத்தினார்**

ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும். வழங்கத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் மன்னார் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

வழக்குத் தொடுநர் சார்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி செஸான் மஹ்பூம் வழக்கை நெறிப்படுத்தினார்.

# 3 மருத்துவக் கல்லூரிகளுக்கு அமைச்சரவை அங்கிகாரம்

ஜனாதிபதி ஊடக மையத்தில் திங்கட்கிழமை (11) நடைபெற்ற ஊடக சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அமைச்சர் மேலும் தெரிவிக்கையிவ்,

"நமது நாட்டு மாணவர்களில் பலர் வெளிநாடுகளுக்கு கல்வி கற்கச் செல்கின்றார்கள். நமது நாட்டு மாணவர்களுக்குத் தேவையான வசதிகளையும் வாய்ப்புகளையும் இந்நாட்டில் வழங்காமல் இருப்பது அவர்களுக்கு நாம் இழைக்கும் அநீதியாகும்.

நமது நாட்டின் மருத்துவக் கல்லூரிகளில் விரிவுரையாளர்களாகவும் ஆலோசகர்களாகவும் பணியாற்றியவர்களே இங்கும் பணியாற்றுவார்கள். அவர்களுக்கு குறைந்தபட்ச தகுதிகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய மருத்துவ பீடங்களின் தரத்திற்கு அல்லது அதற்கு அப்பால் இன்னும் அதிக தரத்துடன் இந்த மருத்துவக் கல்லூரிகள் இருக்க



வேண்டும் என்று ஒரு சட்டத்தை முன்மொழிந்துள்ளோம். மேலும், அந்தக் கல்லூரிகளுக்கு மூன்று மருத்துவமனைகளும் இணைக்கப்படவுள்ளன.

உயர்கல்விக்காக ஒவ்வொரு துறைகளுக்கும் உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அதற்காக அரச வர்த்தமானி மூலம் குறைந்தபட்ச தகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. நாட்டில் சுமார் 13 மருத்துவ பீடங்கள் உள்ளன. அதற்கு சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் மாத்திரமே உள்வாங்கப்படுகின்றார்கள்.

உண்மையில் நமது நாட்டு மாணவர்களின் அறிவு தொடர்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அடிப்படைத் தகுதிகளைக் கொண்ட மாணவர்களுக்கு இன்னொரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

இந்தத் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இணையும் மணவர்களில், 10% மாணவர்களுக்கு கல்விப் புலமைப்பரிசில்களை வழங்குமாறும் இந்தப் பல்கலைக்கழகங்களிடம் தனிப்பட்ட முறையில் கோரப்பட்டுள்ளன. அடிப்படைத் தகுதிகள் இருந்தும், தொடர்ந்தும் மருத்துவப் படிப்பைத் தொடர முடியாத மாணவர்கள் இந்நாட்டில் உள்ளனர்.

எனவே அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தமது உயர்கல்வியைத் தொடர்ந்தால் அதற்கும் எமது நாட்டுப் பணமே செலவிடப்படுகின்றது. அதனால் குறைந்த பட்ச தகுதிகளைப் பெறும் மாணவர்களுக்கு எமது நாட்டிலேயே மருத்துவப் படிப்பைத் தொடரும் வாய்ப்பு இதன் மூலம் ஏற்படுகின்றது.

மருத்துவர்கள் உட்பட பொதுவாக புத்தி ஜீவிகள் வெளியேற்றம் என்பது சுகாதாரத் துறையில் உள்ள சில

> **அவர்களின் வருமானம், எரிபொருளுக்கு செலவிட வேண்டிய பணம் மற்றும் அவர்களின் பொது ஊதியம் ஆகியவை குறித்து கேள்விகள் எழும்பின. எனவே இவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல தீர்மானிக்கின்றனர்**

குறைபாடுகளால் நடப்பது அல்ல. இதற்கு முக்கிய காரணம், 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளதார நெருக்கடியான சூழ்நிலையில், நாட்டின் பொருளாதார சிக்கல்களைத் தீர்க்க பல்வேறு வழிகளில் வரிகளை விதிக்க வேண்டியிருந்தது.

அதன் மூலம் அவர்களின் வருமானம், எரிபொருளுக்கு செலவிட வேண்டிய பணம் மற்றும் அவர்களின் பொது ஊதியம் ஆகியவை குறித்து கேள்விகள் எழும்பின. எனவே இவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல தீர்மானிக்கின்றனர்" என்றார்.

# “சதியை முறியடிப்போம்”

## நாடளாவிய ரீதியில் வைத்தியர்கள் ஆர்ப்பாட்டம்

■ சண்முகன் தவசீலன்

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பல மாவட்டங்களில் அமைந்துள்ள வைத்தியசாலைகளில் சாத்வீக போராட்டங்களை செவ்வாய்க்கிழமை (12) முன்னெடுத்தன.

வைத்தியசாலைகளின் சிகிச்சை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டன என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வைத்தியர்கள் நாட்டை விட்டுச் செல்கின்றமையினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் தீர்வொன்றைப் பெற்றுத்தருமாறு கோரியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்து. செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 02 மணி வரை குறிப்பிட்ட எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.




## வரலாற்று சாதனை மாணவி றியோன்சியாவுக்கு பாராட்டு

■ வி.ரி.சகாதேவராஜா



பொத்துவில் வரலாற்றில் இரட்டைச் சாதனை புரிந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் மூன்று ஏ சித்தி பெற்ற றொட்டைக்கிராம மாணவி செல்வி சாந்தலிங்கம் றியோன்சியாவை மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் திங்கட்கிழமை (11) நேரில் சென்று பாராட்டினார்.

அவருக்கு பரிசுப் பொருட்களை வழங்கியதோடு, பல்கலைக்கழகம் சென்று படிப்பைத் தொடர விசேட புலமைப் பரிசில் ஒன்றையும் வழங்கினார்.

பொத்துவில் ஊரணி சரஸ்வதி வித்யாலயத்தில் வைத்து அவருக்கான பாராட்டு நிகழ்வு நடைபெற்றது.

இராமகிருஷ்ண மிஷனினால் நடைமுறைப்படுத்தப் பட்டு வரும் பல்கலைக்கழகம் சென்று படிக்கும் வரையான காலப்பகுதிக்கான புலமைப் பரிசில் திட்டத்தில் றியோன்சியாவும் உள்வாங்கப் பட்டுள்ளார். அங்கு சுவாமி அதற்கான ஆவணங்களை சாதனை மாணவியிடம் வழங்கி வைத்தார்.

மாணவி றியோன்சியா, அடிப்படை வசதிகளற்ற றொட்டைக்கிராமத்தின் முதல் 3ஏ பெற்ற சாதனை படைத்த மாணவி என்பதோடு பொத்துவில் தமிழ் மகா வித்தியாலயத்திற்கும் முதல் 3ஏ சாதனை பெற்று இரட்டை சாதனையை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆஸாத் மௌலானா மீது பெண் ஒருவர் வழக்கு தாக்கல்

■ பாறுக் ஷிஹான்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தற்போது கருத்துக்களை தெரிவிக்கின்ற பிள்ளையான் எனப்படும் கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் சிவநேசதுரை சந்திரக்காந்தனின் சகா ஆஸாத் மௌலானா மீது பெண் ஒருவர் போலியான ஆவணங்களை சமர்ப்பித்து மோசடியான முறையில் தன்னை திருமணம் செய்து ஏமாற்றியதாக கல்முனை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டிற்கமைய செவ்வாய்க்கிழமை (12) கல்முனை நீதிவான் நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ். எம் சம்சுதீன் குறித்த பெண் தெரிவித்துள்ள குற்றச்சாட்டின் உண்மைத்தன்மை குறித்து விசாரணை மேற்கொண்டு மன்றிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டதுடன் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி வரை குறித்த வழக்கினை ஒத்தி வைத்தார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியை சேர்ந்த 35 வயது மதிக்கத்தக்க இளம்பெண் ஒருவரே தனது சகோதரர் சகிதம் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்து பிள்ளையான் எனப்படும் கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் சிவநேசதுரை சந்திரக்காந்தனின் சகா ஆஸாத் மௌலானா மீது முறைப்பாடு மேற்கொண்டுள்ளார்.

அதில் போலியான ஆவணங்களை சமர்ப்பித்து முதல் திருமணத்தை மறைத்து தன்னை மறுமணம் செய்துள்ளதாகவும் பின்னர் மட்டக்களப்பு தனியார் விருந்தினர் விடுதி ஒன்றிற்கு அழைத்து சென்று பல்வேறு ஆசை வார்த்தைகள் கூறி அங்கு சில நாட்கள் தங்க வைத்து குடும்பம் நடாத்தினார் எனவும் பின்னர் தன்னை ஏமாற்றி தலைமறைவாகி இருப்பதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சேனல் 4 ஆவணப்படத்தின் முக்கிய சாட்சியாக இந்த ஆசாத் மௌலானா தென்பட்டதன் பின்னர் சில தினங்களுக்கு முன்னர் அம்முறைப்பாட்டை மேற்கொண்டிருந்தார். அத்துடன் 2019.09.29 திகதி அன்று குறித்த திருமணம் அம்பாறை மாவட்டம் இறக்காமம் எனும் பகுதியில் நடைபெற்றுள்ளதுடன் வரவேற்பு உபசாரங்கள் யாவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முக்கிய விருந்தினர் மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.எனினும் தற்போது இறக்காமம் பள்ளிவாசல் குறித்த திருமணம் மறுத்துள்ளதுடன் போலியாக தமது பள்ளிவாசல் ஆவணம் தயார் செய்யப்பட்டு இம்மோசடி திருமணம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

## காணி அளவீட்டுப்பணிகள் தற்காலிகமாக நிறுத்தம்

■ நிதர்சன் வினோத்



காணி அளவீட்டு பணிகள் செவ்வாய்க்கிழமை (12) காலை முன்னெடுக்கப்பட இருந்த நிலையில் இதற்கு எதிப்பு தெரிவித்து மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதனை அடுத்து தெல்லிப்பழை பிரதேச செயலாளரின் அறிவித்தலுக்கு அமைய அளவீட்டுப்பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

## ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க கோரி போராட்டம்





■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி தெற்கு கல்வி வயலத்துக்கு உட்பட்ட கோனாவில் மகா வித்தியாலத்தில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்தும் காணப்படுவதனால் அதனை நிவர்த்திச் செய்ய கோரி மாணவர்கள் தங்களது பெற்றோர்களுடன் இணைந்து வீதியில் இறங்கி போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்

குறித்த போராட்டமானது செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் பாடசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

> **ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்தும் காணப்படுவதனால் அதனை நிவர்த்திச் செய்ய கோரி மாணவர்கள் தங்களது பெற்றோர்களுடன் இணைந்து போராட்டம் முன்னெடுத்திருந்தனர்.**

“ஆசிரியர்களை நியமிக்கும் வரை ஆசிரியர் இடம்மாற்றம் வழங்காதே”, “பற்றாக்குறையான ஆசிரியர்களை நியமிக்கவும்” உள்ளிட்ட வாசகங்களை எழுத்திய பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் நடத்தப்பட்ட இடத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி தெற்கு கல்வி வலைய பனிமனையின் அதிகாரிகள் பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் வருகை தராத பட்சத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பொருத்தமான வளவாளர்களை நியமிப்பதாக உத்தரவாதம் அளித்தனர். அதன் பின்னரே மாணவர்கள் போராட்டத்தை கைவிட்டு வகுப்புக்களுக்குச் சென்றனர். பெற்றோரும் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

## ஐஸ் ஏற்றி வந்த கெப் குத்துக்கரணம்

■ வி.ரி. சகாதேவராஜா



கல்முனை பிரதேசத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி சென்று கொண்டிருந்த ஐஸ் ஏற்றிய கெப் வாகனம் ஒன்று பிரபல தியேட்டர் ஒன்றுக்கு முன்பாக உள்ள வளைவில் செவ்வாய்க்கிழமை (12)

அதிகாலை குத்துக்கரணம் அடித்தது.

கெப் வாகனத்தின் பின் சக்கரம் வெடித்ததை அடுத்தே, இந்த விபத்து இடம் பெற்றிருப்பதாகவும், ஐஸ் கட்டிகள் வீதி எங்கும் சிதறியதால் போக்குவரத்து ஒரு சில மணி நேரம் பாதிப்பு ஏற்ப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வாகனத்தின் சாரதியும் உதவியாளரும் சிறு காயங்களுக்கு உள்ளாகி அருகில் உள்ள கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கல்முனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நந்திக்கடலில் கசிப்பு காய்ச்சிய இளைஞன் கைது

■ செ.கீதாஞ்சன்



முல்லைத்தீவு நந்திகடல் நீரேரியில் சட்ட விரோதமான முறையில் கசிப்பு சாய்ச்சி வியாபாரம் செய்து வந்த இளைஞன் ஒருவரை முள்ளியவளை பொலிஸார் திங்கட்கிழமை (11) கைது செய்துள்ளனர்.

நந்திக்கடல் கரைப்பகுதியில் நீண்ட காலமாக சட்ட விரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது இளைஞன் ஒருவன் தனியாக கசிப்பினை காய்ச்சி வந்துள்ள போது கையும் களவுமாக பிடித்துள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட இளைஞனையும் சான்று பொருட்களையும் நீதி மன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

## எகிறியது எலுமிச்சை விலை

எலுமிச்சை விலை பாரியளவில் அதிகரித்துள்ளன.

இந்நிலைமைகள் தொடர்பில் கருத்து தெரிவித்த மக்கள் தற்போது நாட்டில் 1400 ரூபாய் தொடக்கம் 1600 ரூபாவிற்கும் இடைப்பட்ட விலையில் ஒரு கிலோ கிராம் எலுமிச்சை விற்பனை செய்யப்படுவதாகவும், இவ்வாறான விலைக்கு விற்கப்படும் எலுமிச்சை மிகவும் சிறியது எனவும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்மையால், போக்குவரத்துச் செலவுகள் உள்ளிட்ட செலவுகள் அதிகரித்துள்ளன. இதனால், சிலபொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

## கிளிநொச்சி மாணவியை காணவில்லை காணவில்லை



கிளிநொச்சி விநாயகபுரத்திலிருந்து நகரத்தில் உள்ள தனியார் கல்வி நிலையத்துக்கு சென்ற மாணவி ஒருவர் கடந்த மாதம் 5-ம் திகதி முதல் காணாமல் போன நிலையில் குறித்த மாணவியை பெற்றோர் தேடி வருகின்றனர்

கிளிநொச்சி விநாயகபுரத்திலிருந்து சேர்ந்த கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் 2023(கலை) உயர்தர பிரிவில் கல்வி பயின்று வந்த புவனேஸ்வரன் ஆர்த்தி என்ற மாணவியே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இவரை பல்வேறு இடங்களில் ஒரு மாத காலமாக தேடியும் இவரை பற்றிய எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை.

இவரை பற்றிய தகவல் தெரிந்தவர்கள் அல்லது இவரை இலங்கையின் எப்பிரதேசத்திலாவது கண்டவர்கள் இருந்தால் 0774941522 அல்லது 0772144553 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு (தந்தை) அறிய தருமாறு கேட்டுள்ளார்.

## புதையல் தோண்டிய நால்வர் சிக்கினர்

■ ரஸீன் ரஸ்மின்



புத்தளம் - கருவலகஸ்வெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெவநுவர பிரதேசத்தில் புதையல் தோண்டினர் என்ற சந்தேகத்தின் பேரில் நால்வரை கைது செய்துள்ளதாக கருவலகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

தனியார் காணியொன்றில் புதையல் தோண்டுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சுற்றிவளைப்பை மேற்கொண்ட போதே குறிப்பிட்ட நான்கு பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும், புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட இயந்திரம் உள்ளிட்ட ஏனைய பொருட்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நான்கு பேரையும் புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

## தீயினால் பனைமரங்கள் கருகின



■ எம். எஸ். எம். நூர்தீன்

மட்டக்களப்பு, காத்தான்குடியில் காணி ஒன்றில் திங்கட்கிழமை (11) ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக பல பனை மரங்கள் எரிந்து சேதமடைந்துள்ளன.

அந்த தீ, அயலில் இருந்த நான்கு காணிகளுக்கும் பரவி உள்ளது இதனையடுத்து பொதுமக்கள் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைக்கும் பிரிவினர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

குறிப்பிட்ட காணிகளுக்கருகில் மர ஆலை மற்றும் பாதணி உற்பத்தி நிலையம் என்பன அமைந்துள்ளதால் அங்கு தீப்பரவுவதையும் தடுத்துள்ளதுடன் ஏனைய பகுதிகளுக்கும் தீ பரவாமல் தீயை முற்றாக அனைத்துள்ளனர்

காணியில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக சுமார் 150 க்கு மேற்பட்ட பனை மரங்கள் எரிந்து சேதமடைந்துள்ளன.

## காணிக்கான ஆவணங்கள் கையளிப்பு

■ வி.சுகிர்தகுமார்

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆலையடிவேம்பு வடக்கு வங்கியின் காணிக்குரிய ஆவணங்கள் இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பெயரில் மாற்றப்பட்டு அதற்கான ஆவணங்கள் சம்பிரதாயபூர்வமாக செவ்வாய்க்கிழமை (12) ஒப்படைக்கப்பட்டன.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் ஆலோசனைக்கு அமைய உரிய காணியின் ஆவணங்கள் மாற்றப்பட்டு அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்றாஸிடம் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் சமுர்த்தி மாவட்ட காரியாலய கணக்காளர் எம்.எப். பர்ஹான், ஆலையடிவேம்பு பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் என்.கிருபாகரன் உள்ளிட்ட அதிகாரிகளும் இணைந்திருந்தனர்.



# பொதுப் போக்குவரத்துக்கு மாற்றுப் பொறிமுறை அவசியம்

எரிபொருட்களின் விலை அதிகரிப்பை அடுத்து, பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சொந்த வாகனங்கள், அலுவலகங்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட வாகனங்களை பயன்படுத்துவோரைத் தவிர, சாதாரண மக்கள் பொதுப் போக்குவரத்தையே நம்பியிருக்கின்றனர்.

அந்த பொதுப் போக்குவரத்து சேவையில் ஏதாவது குளறுபடிகள் ஏற்பட்டுவிட்டால், பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமைக்கு பயணிகள் தள்ளப்பட்டு விடுகின்றனர். இதில், பஸ்களை விடவும் ரயில்களில் பயணம் செய்வோரின் நிலைமை தலைகீழாக மாறிவிடும்.

ரயில்களில் பயணிப்போரில் பலர், பல மணிநேரம் பயணிக்கவேண்டும். கட்டணமும் குறைவு, ஆசனம் கிடைக்காவிட்டாலும் எவ்விதமான அசதியுமின்றி, நின்று கொண்டே பயணிக்கலாம். அதிகளவிலான பயணிகள் ஒரே நேரத்தில் பயணிக்கலாம். எவ்விதமான இடையூறுகளும் ஏற்படாவிடின், ரயில் நிலையங்களில் மட்டுமே தரித்துநிற்கும். இதனூடாக நேர காலத்தை மிச்சப்படுத்தலாம் என்பதெல்லாம் கிடைக்கும் சிறிய சலுகைகளாகும்.

எனினும், ரயில் சாரதிகளின் வேலை நிறுத்தம் காரணமாக அலுவலக ரயில்கள் உட்பட 50க்கும் மேற்பட்ட ரயில் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதால் பயணிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். குறைந்த எண்ணிக்கையிலான ரயில்கள் இயக்கப்படுவதால் பயணிகளின் உயிருக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளதுடன், மிதிபடுதல், ரயில்களில் இருந்து தவறி விழுதல் போன்ற விபத்துக்களால் பயணிகள் காயமடையும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

சுகயீனம் காரணமாக பயணிகள் மயங்கி விழுவதையும் காணக்கூடியதாக உள்ளதுடன், பல்வேறு நோய்களாலும், பாதிக்கப்பட்டவர்கள் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தால் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில், எப்படியாவது பயணிக்க வேண்டுமென நினைப்போர், மிதிபலகைகளில் பயணிப்பதால், பக்கவாட்டில் இருக்கும் இரும்புத் தூண்கள், அல்லது மின்கம்பங்களுக்கு அடிபட்டு மரணித்துவிடுவர், இல்லையேல் பாரிய காயங்களுக்கு உள்ளாகி, அங்கவீனமாகிவிடுவதும் உண்டு.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு மத்தியில் கண்டியில் இருந்து கொழும்பை நோக்கி பயணித்த ரயிலின் கூரையின் மீதேறி பயணித்த இளைஞன், ரயில் நிலையத்தின் கூரையில் மோதுண்டு உயிரிழந்துள்ளார். இவர் ஒரு பொறியியல் மாணவர் ஆவார் என்பது கலைக்குரியது.

ரயில் எஞ்சின், ரயில் கதவுகள் ஜன்னல்களில் தொங்கிக்கொண்டு பயணித்தவர்களும், இவ்வாறான திடீர் விபத்துக்களுக்கு கடந்த காலங்களில் முகங்கொடுத்தனர்.

பொதுப்போக்குவரத்து சேவைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் குதிக்கும் முன்னர், தங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்து உரிய தரப்பினருடன் முதலில் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும். தங்களுக்குச் சாதகமான பெறுபேறுகள் கிடைக்காவிடின், அடையாள வேலைநிறுத்தத்தை ஆரம்பித்து, வேலைநிறுத்தத்தில் குதிக்கலாம்.

அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுமென யூகித்துக்கொண்டால், போக்குவரத்துத் துறையில் இறுதி முடிவை எடுக்கும் அதிகாரத்தில் இருப்பவர்கள், பொதுப் போக்குவரத்தில் முறையான பொறிமுறையை ஏற்படுத்தி, பயணிகள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்காத வகையில் தீர்மானங்களை எட்டுவது காலத்தின் தேவையாகும் என்பதை நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உங்கள் நெஞ்சத்தை நீங்களே உடைத்து, உங்களை குற்றவாளி ஆக்கவேண்டாம். தேவையற்று எதற்கும் சலனப்பட்டு கலங்குவது நிறுத்தப்பட வேண்டும். துணிச்சல் இன்றேல் வாழ்வில் இனிமை துலங்காது.

பிறர் கூறும் கடுஞ்சொற்களைக் காதுகொடுத்துக் கேட்டலாகாது. இத்தகையவர்கள் வேண்டுமென்றே மனதைக் கலைத்துவிடும் செய்திகளைச் சொல்வதுண்டு.

மேலும் குடும்பத்தில் கோபத்தைக் காட்டலாகாது. நிதிப்பிரச்சினை, அலுவலகப் பிரச்சினை எனப் பலதரப்பட்ட அழுத்தங்களை அநேகர் அனுபவித்து வருவதுண்டு.

எந்தப் பாரிய பிரச்சினைகளையும் உடைக்க முடியும். திட்டமிட்டு கருமங்களை ஆற்றுக! உங்களுக்கு நீங்களே எஜமானன். மறக்க வேண்டாம்!

உங்களுக்கு எனப் பல கடமைகள் உண்டு. அவை பாரமானது என எண்ணினால், சின்ன விடயங்களும் பெரும் பாரமாகி விடும்.

எப்பொழுதும் மனததை இலேசாக்கி, அனைவரிடமும் சகஜமாகப் பழகினால், அழுத்தங்கள் குறைந்துவிடும். வாழ்க்கையை இரசித்தால் நிம்மதி நிச்சயம்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# 2019 குண்டு வெடிப்புக்களை கோட்டா திட்டமிட்டு இருக்கலாமா?

எம்.எஸ்.எம். ஐயூப்

பிள்ளையான் எனப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுறை சந்திரகாந்தனின் முன்னாள் அந்தரங்கச் செயலாளரான அன்ஸீர் அசாத் மௌலானாவுடன் நடத்திய நேர்காணலொன்றை மையமாக வைத்து பிரிட்டனின் சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம் தயாரித்து கடந்த வாரம் வெளியிட்ட விவரணத் திரைப்படம் நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

2018 ஆண்டு ஜனவரி மாதம் தாம் பிள்ளையானின் ஆலோசனையின் படி அரச புலனாய்வுச் சேவையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் துவான் சுரேஷ் சலேக்கும் 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில பல இடங்களில் தற்கொலை குண்டுகளை வெடிக்கச் செய்து 269 பேரை படுகொலை செய்த தேசிய தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் ஹாஷிமுக்கும் இடையில் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்ததாக மௌலானா இந்த விவரணப்படத்தில் கூறுகிறார்.

புத்தளம் பிரதேசத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் அந்த சந்திபிப்ன் போது கோட்டாபய ராஜபக்ஷவை பதவிக்கு கொண்டு வர நாட்டில் பாதுகாப்பற்ற நிலைமையை உருவாக்க வேண்டும் என்று சலே கூறியதாகவும் மௌலானா மேலும் கூறுகிறார். அதாவது பாதுகாப்பற்ற நிலையை உருவாக்கி அதன் மூலம் பாதுகாப்புத்துறையில் பரிச்சயமுள்ள கடும் போக்குள்ள ஒருவர் நாட்டின் தலைவராக வேண்டும் என்றதோர் கருத்தை நாட்டு மக்களின் மனதில் திணித்து கோட்டா தேர்தல் களத்தில் போட்டியிடுவதே திட்டமாகும் என்றே அவர் கூறுகிறார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி பயங்கரவாதிகளால் மூன்று உல்லாச பிரயாண ஹோட்டல்களிலும் மூன்று கிறிஸ்தவ தேவஸ்தானங்களிலும் நடத்தப்பட்ட இந்த குண்டுத் தாக்குலுக்கு பின்னால் அரச புலனாயவுத் துறையினரே இருந்தனர் என்பதையே சனல் 4 இந்த விவரணப்படத்தின் மூலம் உலகுக்கு வழங்கும் செய்தியாகும்.

ஆனால் மலேசியாவில் இலங்கை தூதரகத்தில் கடமையாற்றிய தாம் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக மௌலானா கூறும் 2018 ஆம் ஆண்டு முழுவதிலும் மலேசியாவிலேயே இருந்ததாக சலே கூறுகிறார். சனல் 4 அவரது கூற்றையும் விவரணப்படத்தில் உள்ளடக்கியுள்ளது.

நாம் அவருடைய கருத்தையும் வெளியிட்டோம் இவருடைய கருத்தையும் வெளியிட்டோம் எனவே நாம் எவருக்கும் அநீதி இழைக்கவில்லை என்று விவரணப்படத் தயாரிப்பாளர்கள் கூறலாம். ஆயினும் புலனாயவு ஊடகவியல் என்றால் வெறுமனே இருவரினது கூற்றுக்களையும் முன்வைப்பது மட்டும் போதுமானதல்ல. அவர்கள் யார் சொல்வது உண்மை என்பதையும் ஆராய்ந்து இருக்க வேண்டும். சலே கூறுவது உண்மையாக இருந்தால் மௌலானா கூறுவது பொய்யாகிறது. அந்த சலே சஹ்ரான் சந்திப்பு என்பதன் மீதே குண்டு வெடிப்புக்களுக்குப் பின்னால் கோட்டாபய ராஜபக்ஷ இருந்தார் என்ற முழு வாதமும் தங்கியிருக்கிறது. மௌலானா கூறுவது பொய்யானால் அந்த வாதம் அடித்தளமின்றி சரிந்துவிடுகிறது.

இந்த விடயத்தை முழுமையாக ஆராயாமல் சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம் இவ்விவரணப்படத்தை வெளியிட்டமை தொழில்சார் ஒழுங்கை மீறும் செயலாகும் ஏனெனில் தெளிவின்மை காரணமாக மக்கள் மத்தியில் குழப்பங்களும் முரண்பாடுகளும் தோன்றலாம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னல் கோட்டாபய ராஜபக்ஷ இருந்தார் என்பது இதுவரை நிரூபிக்கப்படாவிட்டாலும் அதனை முதன்முதலில் கூறியது சனல் 4 நிறுவனம் அல்ல. இது 2020 ஆம் ஆண்டு முதல் பலர் வெளியிட்டு வரும் கருத்தாகும். சலே- சஹ்ரான் சந்திப்பு பற்றிய கருத்து மட்டுமே புதிதாக இந்த விவரணப்படத்தின் மூலம் தெரிவிக்கப்படுகிறது. அதற்கும் சனல் 4 வேறு ஆதாரங்களை முன்வைக்கவுமில்லை.

ஆயினும் இவ்வாறு நடந்து இருக்காது என்று கூறவும் இதுவரை பலமான ஆதாரங்கள் எவரும் முன்வைக்கவில்லை. தாம் 2018 ஆம் ஆண்டு இலங்கையில் இருக்கவில்லை என்ற சலேயின் கூற்று அவர் மௌலானா மூலமாக சஹ்ரானை சந்தித்தார் என்ற கருத்தை முறியடிக்கும் பலமான கூற்றாக தெரிந்தாலும் அதனை சரிபார்க்க சனல் 4 தொலைக்காட்சி முயன்றதாக தெரியவில்லை. அவரது கூற்று உண்மையாக இருந்தால் மட்டுமே மௌலானா கூறும் காலத்தில் அந்த சந்திப்பு இடம்பெறவில்லை என்றும் மௌலானா கூறுவது உண்மை அல்ல என்றும் ஏற்றுக் கொள்ளலாம்.

பயங்கரவாத் தாக்குதலுக்குப் பின்னல் கோட்டாவோ அல்லது அவரது கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியோ இருந்ததாக நிரூபிக்கப்படும் வரை எவரும் அவர்களை குற்றஞ்சாட்ட முடியாது தான். ஆயினும் தாம் நிரபராதிகள் என்பதற்கு அக்கட்சியினர் முன்வைக்கும் வாதங்கள் மிகவும் பலவீனமானவையாகும். அதேபோல் அவர்கள் இதனை திட்டமிடாவிட்டாலும் தாக்குதல்கள் இடம்பெற்றதை அடுத்து மிகக் கேவலமான முறையில் அவர்கள் அதனை பாவித்து இனவாதத்தை தூண்டி தமது வேட்பாளரான கோட்டாவின் தேர்தலுக்காக அதனை மிகவும் கீழ்த்தரமான முறையில் பாவித்தனர் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

சிங்கள- பௌத்த தலைவர் ஒருவரை பதவிக்கு கொண்டு வர ஒன்பது முஸ்லிம் தீவிரவாதிகள் உயிர் தியாகம் செய்வார்களா என்று நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பொதுஜன முன்னணியின் தலைவர்கள் வாதிடுகிறார்கள். நிச்சயமாக இது பலமான வாதம் தான் ஆனால் வேறுபட்ட நோக்கங்களுக்காக எதிரிகளும் சேர்ந்து செயற்பட்டமைக்கு வரலாற்றில் எவ்வளவோ உதாரணங்களை காணலாம்.

மாகாண மட்டத்துக்கு அப்பால் அதிகார பரவலாக்கல் செய்வதையும் எதிர்த்த ஒரு சிங்களத் தலைவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கத்தில் இருக்கும் நிலையில் நாட்டை பிரித்து தனித் தமிழ் நாடொன்றை காண தமது படைகளுடன் போரிடும் கிளர்ச்சிக் குழுலொன்றுக்கு ஆயுதம் வழங்குவாரா? ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச 1989 ஆம் ஆண்டு அவ்வாறு செய்தார்.

சிங்கள -பௌத்த தனித்துவத்தையே அரசியல் மூலதனமாகக் கொண்ட தலைவர் ஒருவர் அரச படைகளுக்கு எதிராக போரிடும் தமிழ் தீவிரவாத குழுவொன்றுக்கு பணம் வழங்குவாரா? 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது வடக்குக் கிழக்கில் தேர்தல் பகிஷ்கரிப்பை மேற்கொள்வதற்காக மஹிந்த ராஜபக்ஷவின் சார்பில் பஸில் ராஜபக்ஷ 18 கோடி ரூபா புலிகளுக்கு வழங்கியதாக தற்போதைய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சில வருடங்களுக்கு முன்னர் போதுக் கூட்டமொன்றில் கூறினார்.

பஸில் ராஜபக்ஷ இரண்டு பயணப் பொதிகளில் நிறைத்து இப்பணத்தை தமது அலுவலகத்திலேயே புலிகளின் பிரதிநிதியான எமில் காந்தனிடம் கையளித்ததாக அலஸ் அக்கூட்டத்தில் கூறினார். அந்த கூட்டத்தின் வீடியோ இன்னமும் யூடியூப்பில் இருக்கிறது. இந்தக் கூற்றுக்காக அலஸூக்கு எதிராக ராஜபக்ஷக்கள் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே நாமலில் வாதம் பலமானதாக இல்லை.

அதேவேளை, உலகில எங்கும் அரச உளவுத்துறையினர் பல்வேறு நோக்கங்களுக்காக அரச படைகளுக்கு எதிராக போரிடும் கிளர்ச்சிக் குழுக்களுடன் தொடர்பு கொள்வது ஒன்றும் புதிய விடயம் அல்ல. இரு சாராரும் மற்றைய சாராருக்குள் தமது ஏஜன்டுகளை ஊடுருவச் செய்வதும் சகஜமான விடயமாகும். இரு சாராரும் மற்றைய சாராரின் உறுப்பினர்களிடம் பணத்துக்கு இரகசியமாக தகவல் பெறுவதும் சகஜம்

2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் 70 சதவீத சபைகளை கைப்பற்றி பலமான நிலையில் இருந்த பொதுஜன முன்னணிக்கு 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற பயங்கரவாதிகளுடன் சேர்ந்து சதி செய்யத் தேவை இருக்கவில்லை என்பது நாமலின் மற்றொரு வாதமாகும். 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் போது பொதுஜன முன்னணி 70 சதவீத சபைகளை கைப்பற்றியது என்பது உண்மையே. ஆனால் அக்கட்சி அத்தேர்தலில் 44.65 சதவீத வாக்குகளையே பெற்றது. சட்டத்தின் படி ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளர் வெற்றி பெற 50 சதவீதத்துக்கு மேல் வாக்குகளை பெற வேண்டும். எனவே பொதுஜன முன்னணி 2018 ஆம் ஆண்டு ஜனாதிபதத் தேர்தலில் வெற்றி பெறும் அளவுக்கு பலமாக இருந்ததாக நாமல் கூறுவது உண்மையல்ல.

சலேக்கும் சஹ்ரானுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றதாக கூறப்படும் காலத்தில் தாம் சிறையில் இருந்ததாக கூறும் பிள்ளையான் ஒரு சிறைக் கைதிக்கு அது போன்ற ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேள்வி எழுப்பியிருக்கிறார். இலங்கையில் கைதிகள் சிறையில் இருந்த வண்ணமே பாரியளவில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவது அவருக்கு தெரியாதா என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டியுள்ளது.

அவர்களது வாதங்கள் பலவீனமானதாக இருந்தாலும் கோட்டா தான் குண்டு வெடிப்புக்களுக்குப் பின்னால் இருந்தவர் என்று கூறுபவர்களின் வாதங்களும் நிரூபிக்கப்படவில்லை. கோட்டா, மஹிந்த, ரணில், மைத்திரிபால போன்ற அரசியல்வாதிகள் இதுபோன்றவற்றை செய்யக்கூடியவர்கள் தான். ஆனால் ஆதாரத்துடன் நிரூபிக்கப்படும் வரை எதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்த சதித் திட்டம் பற்றிய கருத்து 2020 ஆம் ஆண்டு முதல் நாட்டில் பரவி இருப்பதால் அதை அறிந்த பொலிஸார், அரச அதிகாரிகள் மற்றும் நீதிபதிகள் ஆகிய சகலரும் இப்போது அதைப் பற்றிய ஒரு நிலைப்பாட்டை கொண்டிருக்கத் தான் செய்வார்கள். இப்போது அதனை அவர்களது மனதில் இருந்து அகற்றுவது கடினமான விடயமாகும். எனவே மௌலானாவின் குற்றச்சாட்டைப் பற்றிய உண்மையை சர்வதேச விசாரணையொன்றின் மூலமே அறிய முடியும்.

## கடிதங்கள்

### கடலுக்குள் இழுத்துச் செல்வதில் பிரச்சனை



மன்னாரில் மீனவ கிராமங்களில் ஒன்றான பள்ளிமுனை கிராம மீனவர்கள் தமது படகுகளை கடலுக்குள் இழுத்துச் சென்று கடல் தொழிலை மேற்கொள்ள பல்வேறு பிரச்சனைகளுக்கு நாளாந்தம் முகம் கொடுத்து வருவதாக குறித்த கிராம மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பள்ளிமுனை கடற்கரையில் இருந்து கடலுக்குள் படகுகளை இழுத்துச் செல்லும் ஓடையில் தற்போது நீர் வற்றிய நிலையில் காணப்படுகிறது. இதனால் மீனவர்கள் தமது படகுகளை கடலுக்குள் இழுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த ஓடை தோண்டப்பட்டு விரிவு படுத்தப் பட்டால் மாத்திரமே மீனவர்கள் எவ்வித தடங்கலும் இன்றி தமது படகுகளையும் ஏனைய மீன்பிடி உபகரணங்களையும் கொண்டு செல்ல முடியும் என தெரிவித்துள்ளனர்.

பள்ளிமுனை கிராமத்தில் சுமார் 1500 க்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். கடல் தொழிலை நம்பி வாழ்ந்து வரும் அவர்கள் ஒவ்வொரு வருடமும் குறித்த பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறித்த ஓடை தோண்டப்பட்டு விரிவுபடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூறி கடந்த காலங்களில் ஜனாதிபதி, கடல் தொழில் அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்றும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வில்லை என மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எஸ்.றொசேரியன் லெம்பேட்



கணேஷ்குமார் மதியந்தி
ஊடக கற்கைகள் துறை
இரண்டாம் வருடம்
யாழ்.பல்கலைக்கழகம்



# வண்ணத்துப்பூச்சி வாழ்க்கைப் பயணம்

பூக்கள் முழுவதும் பாடி நடந்து, பூமி முழுவதையும் வர்ண ஜாலமாக்கும் வண்ணத்துப் பூச்சிகளை விரும்பாத வர்களாக இந்த உலகில் யாரும் இருக்க மாட்டார்கள். கவிஞர்களும், இலக்கிய வாதிகளும் பாடிப் பாடி, இந்த வண்ண அழகுகளை நம் தோழர்களாக மாற்றியுள்ளனர். பல வண்ணங்களிலும், அளவுகளிலும் வாழும் இவை பூச்சிகள் என்று சொல்லப்படுகின்றன. என்றாலும் இறக்கைகளில் காணப்படும் பலவித வண்ணங்கள், அவை அமைக்கப்பட்டுள்ள விதம் போன்றவை என்றுமே நம்மைக் கவர்வன.

இலட்சக்கணக்கான வருடங்களுக்கு முன்பே பூமியில் வண்ணத்துப் பூச்சிகள் தோன்றியதாக வரலாற்று ஆய்வுகள் கூறுகின்றன. அமெரிக்காவில் ப்ளோரிசன் ஏரிக்கரையில் இருந்து கண்டெடுக்கப்பட்ட லிம்பாலிடே வண்ணத்துப் பூச்சியின் படிவம் 'fossil' 4 கோடி வருடங்களுக்கு முந்தையதாகக் கருதப்படுகிறது. 1973ல் பிரான்சில் கண்டெடுத்த புதைபடிவப் பொருள்களின் ஆராய்ச்சிகள் இதை உறுதிப்படுத்துவதாக அமைந்தது. இவை, ஆர்த்ரோபோடா என்ற வகையைச் சேர்ந்தவை. உயிரினங்களின் வகைப்பாட்டில், அதிக உயிரினங்கள் அடங்கிய பிரிவு இது. ஆர்த்ரோபோடா என்ற கிரேக்கச் சொல்லின் பொருள் பல பகுதிகள் இணைந்து உருவான காலுள்ள உயிரினங்கள். இவை அடங்கியுள்ள பூச்சிகள் (insectae ) பிரிவில்தான் பிராணிகளும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதில் அதிக எண்ணிக்கையில் உள்ளவை, பூச்சிகள் (insectae ). 29 பிரிவுகளில் 627 குடும்பங்கள் உள்ளன. இதில் லெப்பிடோட் டிரா குடும்பத்தில் வண்ணத்துப் பூச்சிகள் உட்படுத்தப்பட்டுள்ளன.

1735ல் கார்ல் லினயஸ் இப்பெயரை வழங்கினார். வண்ணத்துப் பூச்சிகளின் வாழ்வில் நான்கு நிலைகள் உள்ளன. முட்டை, லார்வா, பியூப்பா, வண்ணத்துப் பூச்சி. இணை சேர்ந்ததற்குப் பிறகு, பெண் வண்ணத்துப் பூச்சிகள் முட்டை இடுவதுடன் வண்ணத்துப் பூச்சிகளின் வாழ்க்கை சுழற்சி ஆரம்பிக்கிறது. நான்காவது நிலையில் வண்ணத்துப் பூச்சி வெளியே வருகிறது. வண்ணத்துப் பூச்சிகளில் ஆண், பெண் வேறுபாட்டை அறிந்து கொள்வது கடினம். பியூப்பாவில் இருந்து வெளிவந்தவுடன் இணை சேரும் வண்ணத்துப் பூச்சிகளும் உள்ளன.butterfly 433முட்டையில் இருந்து வெளியே வரும் லார்வாக்கள் சாப்பாட்டுப் பிரியர்கள். இவற்றின் முதல் உணவு முட்டையின் ஓடு. பின், தொடர்ச்சியாக இலைகளைத் தின்னத் தொடங்குகிறது. வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் இவை தோலை உரித்துவிடும். அதனால் எது ஆண், எது பெண் என்று கண்டுபிடிப்பது கடினம். சிலந்திகள், குளவிகள், பிராணிகள், ஓணான்கள் போன்றவை இவற்றின் லார்வாக்களை உண்ணும் முக்கிய எதிரிகள். இவைகள் உணவு உண்ணும் வேட்கையுடன் லார்வாக்களின் அருகில் வரும். சில லார்வாக்கள் சிக்கிக் கொள்ளும். வேறு சில தந்திரமாகத் தப்பித்துக் கொள்வதும் உண்டு. சில லார்வாக்கள், சிறிய பாம்பு போல தங்களின் சுபாவத்தை மாற்றிக் கொள்ளும்போது, வேறு சில பறவைகளின் எச்சத்தைப் போல நடிக்கும். துர்நாற்றம் வீசி எதிரிகளை அருகில் நெருங்க விடாமல் செய்யும் லார்வாக்களும் உண்டு. ஆனால், இவை தோற்றுப் போவது மனிதரிடம்தான். விளைந்ததை எல்லாம் ஒட்டுமொத்தமாகக் கூட்டம் கூட்டமாகத் தின்னும் புழுக்களைத் துரத்த மனிதன் பூச்சிக்கொல்லிகளை தெளிக்கிறான். வண்ணத்துப் பூச்சிகளாக மாறி, மகரந்தச் சேர்க்கை செய்து இவை நம்மை வாழ வைக்கின்றன. இவற்றின் அழிவு நமக்கே ஆபத்தை விளைவிக்கிறது.

வண்ணத்துப் பூச்சியின் வாழ்வில், ஒவ்வொரு நிலையும் அதிசயமானது. இலைகளிலும், பூக்களிலும், செடிகளின் தண்டுகளிலும் இவைகள் முட்டை இடுகின்றன. சில பல முட்டைகள் முதல் நூற்றுக்கணக்கான முட்டைகளை இடுகின்ற வண்ணத்துப் பூச்சிகள் வரை உண்டு. பியூப்பாவில் இருந்து வெளிவந்தவுடன், இவை முட்டை இடுவதற்கான செடிகளைக் கண்டுபிடிக்கின்றன. மற்ற உயிரினங்கள்

**துர்நாற்றம் வீசி எதிரிகளை அருகில் நெருங்க விடாமல் செய்யும் லார்வாக்களும் உண்டு. ஆனால், இவை தோற்றுப் போவது மனிதரிடம்தான்**

**வண்ணத்துப் பூச்சிகளில் ஆண், பெண் வேறுபாட்டை அறிந்து கொள்வது கடினம். பியூப்பாவில் இருந்து வெளிவந்தவுடன் இணை சேரும் வண்ணத்துப் பூச்சிகளும் உள்ளன**

**நம் வீட்டிலும் வண்ணமயமான இந்த அதிசய உயிரினங்கள் விஜயம் செய்ய வேண்டும் என்றால் நம் வீட்டையே ஒரு வண்ணத்துப் பூச்சிகளின் நந்தவனமாக நம்மால் மாற்ற முடியும்**

முட்டை இடாத துளிர் இலைகள்தான் இவற்றுக்குப் பிடிக்கும். இதற்குப் பல காரணங்கள் உண்டு. இவ்வாறு செய்வதால், பியூப்பாவிற்குத் தேவையான உணவு கிடைக்கும். துளிர் இலை முதிர்ச்சியடைய, உதிர்ந்து போக பல நாட்கள் ஆகும். ஆள் அரவம் இல்லாத இடமாக இருப்பதால் எதிரிகளின் நடமாட்டத்தைத் தவிர்க்கலாம். மற்றொரு அதிசயம் வண்ணத்துப் பூச்சிகள் எறும்புப் புற்றுகளிலும் முட்டையிடும். இது ஒன்றுக்கொன்று உதவும் செயல். முட்டையை எறும்புகள் பாதுகாத்துப் பராமரிக்கும். பியூப்பா விரிந்து வரும்போது பியூப்பாவின் வெளியில் இருக்கும் இனிப்புத் திரவம் எறும்புகளுக்கு உணவாகும்.

வண்ணத்துப் பூச்சிகளின் குடும்பத்தில் மிகவும் பெரியது அட்லஸ் மவுத் என்ற வண்ணத்துப் பூச்சி. இந்தியக் காடுகளில் மிக அரிதாகக் காணப்படும் இவற்றின் இறக்கை அளவு 30 செ.மீ. குவின் அலெக்சான்டர்ஸ் பேர்டு விங் (Queen Alexandras Birdwing ) உலகில் மிகப்பெரிய வண்ணத்துப் பூச்சி. இதன் இறக்கையின் அளவு சுமார் 250 மி.மீ. இந்தியாவில் காணப்படும் மிகப்பெரிய வண்ணத்துப் பூச்சி சர்தர்ன் பேர்டுவிங் (Southern Birdwing).இதன் இறக்கை அளவு 140 முதல் 200 மி.மீ வரை. பாப்பிலியோனிடே குடும்பத்தைச் சேர்ந்த ப்ளூ மார்மோன், ரெட் ஹெலன் ஆகியவை இரண்டாவது மற்றும் மூன்றாவது பெரிய வண்ணத்துப் பூச்சிகள்.

வண்ணத்துப் பூச்சிகளைப் போலவே பட்டாம்பூச்சிகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவை இரவில் மட்டுமே வெளியே வருகின்றன. என்றாலும் அபூர்வமாக பகலிலும் இவை வெளியே வருவதுண்டு. வண்ணத்துப் பூச்சிகளைக் காட்டிலும் அற்புதங்கள் நிறைந்தது இவற்றின் உலகம். நம் வீட்டிலும் வண்ணமயமான இந்த அதிசய உயிரினங்கள் விஜயம் செய்ய வேண்டும் என்றால் நம் வீட்டையே ஒரு வண்ணத்துப் பூச்சிகளின் நந்தவனமாக நம்மால் மாற்ற முடியும். அவற்றிற்கு அவசியமான செடிகளை நம் வீட்டுத் தோட்டத்தில் நட்டு வளர்க்க வேண்டும். புல்லினத்தைச் சேர்ந்த செடிகள், எலுமிச்சை, கொய்யா, நெல்லி, ஏலம், மல்பெரி, அகத்தி போன்றவை வண்ணத்துப் பூச்சிகளைக் கவரும் செடிகள். ஈரத்தன்மை உள்ள சூழல், நல்ல சுற்றுப்புறம் ஆகியவை இருந்தால், நம் வீட்டுத் தோட்டம் வண்ணத்துப் பூச்சிகளின் சொர்க்கமாக மாறும்.

வலசை செல்லும் பறவைகளைப் போல வலசை போகும் வண்ணத்துப் பூச்சிகளும் உண்டு. 3000 கிலோமீட்டருக்கும் கூடுதலாக, இவர்களின் ஆகாயப் பயணம் அமைகிறது. மொனார்க் பிரிவைச் சேர்ந்த வண்ணத்துப் பூச்சிகள் இதில் திறமையானவை. வேனில்காலத்தில் வடஅமெரிக்காவில் காணப்படும் இவை, குளிர்காலத்தில் தென்னமெரிக்காவை நோக்கிப் பறக்க ஆரம்பிக்கின்றன. கலிபோர்னியா, மெக்சிகோ, க்யூபா ஆகிய இடங்களில் அடைக்கலம் தேடும் இவற்றைக் காண்பதற்காக சுற்றுலாப் பயணிகள் ஏராளமானோர் இந்த இடங்களுக்கு வருகை தருகிறார்கள். வயிறு நிரம்ப தேன் சாப்பிட்டால் சராசரி 1000 கி.மீ வரை இவற்றால் பறந்து செல்ல முடியும். ஓய்விற்குப்பின் மறுபடியும் பயணம் தொடரும். அமெரிக்காவில் மொனார்க்குகள் போல ஐரோப்பாவில் பெயின்ட்டெட் லேடி பிரபலமானவை. குளிர்காலம் ஆகும்போது வட ஆப்பிரிக்காவிற்கு கூட்டத்துடன் இவை பறந்து செல்லும். பறந்து சென்று அடையும் இடங்களில் முட்டையிடும். வேறொரு பருவ காலத்தில் இவற்றின் புதிய தலைமுறை, மற்றொரு வலசைப் பயணத்தை மேற்கொள்வதும் உண்டு. ஒரே நிறத்தில், இலட்சக்கணக்கான வண்ணத்துப் பூச்சிகள் பறக்கும் காட்சி, அற்புதமான ஒன்று. ஒன்றரை நூற்றாண்டிற்கு முன்பு ஒரு சூடான் பயணி தன் வண்ணத்துப் பூச்சி அனுபவங்களைப் பின்வருமாறு வர்ணித்துள்ளார்.

'நான் சூடான் வழியாக ஒட்டகத்தின் மீது அமர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தேன். கடுமையான வெப்பத்தால் என்னையும் அறியாமல் லேசாகக் கண் அயர்ந்தேன். கண் திறந்து பார்த்தபோது எட்டிப் பிடிக்கும் தூரத்தில் எனக்கு முன்னால் ஏதோ ஒரு இனம் புரியாத காட்சி என் கண் முன்னால் விரிவதை உணர்ந்தேன். வேகமாக ஒட்டகத்தில் இருந்து இறங்கிப் பார்த்தபோது பியூப்பாவில் இருந்து வெளியே வந்த இலட்சக்கணக்கான வண்ணத்துப் பூச்சிகள் பறந்து விண்ணை நோக்கி உயர்ந்து செல்வதை நான் கண்டேன். வெறும் அரை மணிநேரத்திற்குள் அவை எல்லாம் கண் பார்வையில் இருந்து மறைந்து போயின'.தென்னிந்தியாவில், பொதுவாக 5 வகை வண்ணத்துப் பூச்சிகள் காணப்படுகின்றன. குறிப்பாக இவை மேற்குத் தொடர்ச்சி மலைகளை ஒட்டி அமைந்துள்ள கேரளாவில் அதிகமாகக் காணப்படுகின்றன. வீடு, வயல்வெளிகள், வனப்பிரதேசங்கள், நிழல் பிரதேசங்கள், நகரங்களின் எல்லைப் பகுதிகள் போன்றவை இவற்றின் சூழல் மண்டலங்கள். பின் இறக்கைகளில் சிறு வால்களைக் கொண்ட வண்ணத்துப் பூச்சிகளும் உண்டு. இந்தியாவில், மிகப் பெரிய வண்ணத்துப் பூச்சி இனமான கருட வண்ணத்துப் பூச்சி இனம் இன்று அழியும் அபாயத்தில் உள்ளது. பல வண்ணத்துப் பூச்சிகள் அடங்கிய ஒரு குடும்பம் மஞ்சள் வண்ணத்துப் பூச்சிகளின் குடும்பம். மஞ்சள், வெள்ளை நிறங்களில் இவை காணப்படுகின்றன. உலகில் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் உள்ள வண்ணத்துப் பூச்சிகளின் குடும்பங்களும் உள்ளன. இத்தகையவை தென்னிந்தியாவில் நூற்றுக்கணக்கில் காணப்படுகின்றன. முன்கால்கள் மிகவும் சிறியதாக அமைந்த, தூரிகையின் நார்கள் போன்ற உரோமங்களால் மூடப்பட்டவை உரோமக்காலுள்ள வண்ணத்துப் பூச்சிகள். வாசனையை நுகர்வதற்கும், தேனுள்ள செடிகளை அறிந்து கொள்வதற்கும் இவற்றின் கால்கள் உதவுகின்றன. தவிட்டு நிறம், கறுப்பு நிறம், ஆரஞ்சு தவிட்டு நிறம் கலந்த வண்ணத்துப் பூச்சிகள் துள்ளிச் செல்லும் இயல்புடையவை. அளவில் சிறியவையான இவை, சுறுசுறுப்புடன் துள்ளித் துள்ளிச் செல்லும்.

சூழல் நலம்பெற, வண்ணத்துப் பூச்சிகள் நலமுடன் வாழ்வது அவசியம். வண்ணத்துப் பூச்சிகளுக்கான கிராமங்களை உருவாக்கி, அவற்றிற்குரிய சூழல் மண்டலங்களை அமைத்து, வண்ணத்துப் பூச்சிகளை நேசிப்பவர்கள், இயற்கையின் இந்த அற்புதப் படைப்புகள் பூமியிலிருந்து அழிந்து விடாமல் பாதுகாக்க முயற்சி செய்து வருகிறார்கள்.

மும்பையில் உள்ள பாம்பே இயற்கை வரலாறு அறக்கட்டளை, கோழிக்கோடு இயற்கை வரலாற்றுச் சங்கம், திருவிதாங்கூர் இயற்கை வரலாற்றுச் சங்கம், போன்ற பல அமைப்புகள் வண்ணத்துப் பூச்சிகள் உலா வர உதவி செய்கின்றன. வண்ணத்துப் பூச்சிகளைத் தேடிய நம் பயணங்களுக்கு நிச்சயம் இதற்கு உதவும். பூக்களே இறக்கை முளைத்து செடிகளிலிருந்து உயர எழும்பிப் பறப்பதைப்போலப் பறக்கும் வண்ணத்துப் பூச்சிகளைக் குழந்தைகளுக்குக் காட்டிக் கொடுத்து, இவை பற்றிய ஆர்வத்தையும், விழிப்புணர்வையும் உருவாக்குவோம். இனி வாழ்வில் ஒவ்வொரு நாளும், இவற்றின் எழில்மிகு தோற்றத்துடன் நம் பொழுதுகள் விடியட்டும். எல்லாமுமாக விரிந்து பரந்திருக்கும் இயற்கை அன்னையின் நேசப்பிணைப்பில் சுற்றித் திரியும் வண்ணத்துப் பூச்சிகளுடன், வாருங்கள் நாமும் ஒவ்வொரு நாளும் பயணிப்போம்.



### இந்நாட்டு பெண்களுக்கு அதிகாரமளிக்கும் "சுஹுருலிய"

## சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு வந்துள்ளது

அமெரிக்காவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் வருடாந்தம் நடத்தப்படும் சைபர்ஸ்பேஸ் பெலோஷிப் ஒத்துழைப்புக்கான (Cyberspace fellowship) மகளிர் திட்டத்தில் இந்த ஆண்டு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பை இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA) பெற்றுள்ளது. அதன்படி, அந்த நிறுவனத்தின் திறன் அபிவிருத்தியின் சிரேஷ்ட முகாமையாளர் திருமதி. சாதிகா யஹம்பத் நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

சைபர்ஸ்பேஸ் (Cyber பகுதி) மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் உலக அளவில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்தினால் (ICTA) நடைமுறைப்படுத்தப்பட்ட 'சுஹுருலிய' எனும் 'புதுமைப்பெண்' நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பெண்கள் சமூகத்தின் வலுவூட்டலுக்கான இலங்கையின் பங்களிப்பு, இந்த பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு இலங்கைக்கு மிக முக்கியமான அளவுகோலாக இருந்தது.

சுஹுருலிய திட்டத்தின் கீழ், இலங்கையில் 17,000 கிராமப்புற பெண்களுக்கு நேரடியாகவும், மேலும் 175,000 பேருக்கு மறைமுகமாகவும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் அதிகாரம் அளிக்க முடிந்தது. பெண் தொழில்முனைவோர் என்ற வகையில், கடந்த ஆண்டில் மட்டும் 1.2 பில்லியன் ரூபாவை பெண்கள் இந்நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு ஈட்டியுள்ளனர். சுஹுருலியவின் முதல் கட்டத்தின் மிக உயர்ந்த வெற்றியின் அடிப்படையில், அதன் இரண்டாம் கட்டம் தற்போது நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

உலகளவில் பெண்களின் மேம்பாட்டிற்கு உழைக்கும் திட்டங்களைப் படிப்பதற்கும், உலகளாவிய பங்குதாரர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதுக்கும், உலகளாவிய பெண்கள் திட்டங்களை வழிநடத்தும் நபர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் கருத்துகளை பெறுவதற்கும் சாத்தியமானது என்று திருமதி. சாதிகா யஹம்பத் கூறினார்.

**“ பெண் தொழில்முனைவோர் என்ற வகையில், கடந்த ஆண்டில் மட்டும் 1.2 பில்லியன் ரூபாவை பெண்கள் இந்நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு ஈட்டியுள்ளனர். சுஹுருலியவின் இரண்டாம் கட்டம் தற்போது நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.**

அந்தந்த துறைகளில் வல்லுநர்கள் மற்றும் இராஜதந்திரிகளால் இந்த பதினைந்து நாள் நிகழ்ச்சியில், கலந்துரையாடல்கள், விரிவுரைகள், பட்டறைகள் மற்றும் மாநாடுகள் நடத்தப்பட்டது. மற்றும் சைபர் (Cyber) பகுதியில் பணிபுரிபவர்களின் பாலின இடைவெளியைக் குறைப்பதன் மூலம் உலகளாவிய விவாதங்களில் பெண்களின் கருத்துகளுக்கு அதிக வாய்ப்புகளை அளிப்பது இந்த நிகழ்ச்சியில் ஒரு முக்கியமான இலக்காக இருந்தது.

பல நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ஒவ்வொரு நாட்டின் சைபர்ஸ்பேஸ் (Cyber பகுதி) மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் பெண்களின் சமூகத்தை மேம்படுத்துவதில் தீவிரமாகப் பங்களிக்கும் சுமார் ஐம்பது பெண்கள் இந்த ஒத்துழைப்புத் திட்டத்தில் பங்கேற்றனர்.



திரிபோலி

# டேனி புயலுக்கு 3000 பேர் பலி

தெற்கு ஆப்பிரிக்காவில் மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ள நாடு லிபியா. உள்நாட்டுப்போர் நடைபெற்று வரும் லிபியாவின் கிழக்கு பகுதியை கிளர்ச்சியாளர்களும், மேற்கு பகுதியை வெளிநாட்டு ஆதரவு பெற்ற அரசும் நிர்வகித்து வருகின்றன.

இந்நிலையில், லிபியாவை டேனி புயல் தாக்கியது. மத்திய தரைக்கடல் பகுதியில் லிபியா அமைந்துள்ளதால் புயலின் தாக்கம் மிகவும் அதிகமாக இருந்தது.




கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள அந்நாட்டின் டெர்னா, பெடா, சுசா உள்பட பல்வேறு நகரங்களை புயல் தாக்கியது.

புயலுடன் கனமழையும் கொட்டித்தீர்த்தது. இதன் காரணமாக அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இந்த வெள்ளப்பெருக்கில் பலர் சிக்கிக்கொண்டனர்.

புயல், கனமழை, வெள்ளப்பெருக்கில் இதுவரை 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கனமழை, வெள்ளப்பெருக்கில் பலர் மாயமாகியுள்ளனர். மேலும், ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர். இதனை தொடர்ந்து மீட்புப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அமெரிக்கா

## “சீனாவை தனிமைப்படுத்த விரும்பவில்லை”



1955 முதல் 1975 வரை வட வியட்னாம் மற்றும் தெற்கு வியட்னாம் ஆகியவற்றுக்கிடையே நீண்ட போர் நடந்தது. இப்போரில் சீனாவும், ரஷ்யாவும் வட வியட்னாமுக்கு ஆதரவு வழங்கின. தெற்கு வியட்னாமுக்கு அமெரிக்கா மற்றும் கம்யூனிஸத்திற்கு எதிரான நாடுகள் கூட்டாக ஆதரவு வழங்கின.


இப்போர், சுமார் 20 ஆண்டுகள் நடைபெற்றது. இதில் தீவிரமாக பங்கேற்ற அமெரிக்க இராணுவத்தால் வியட்னாம் நாட்டு கொரில்லா போர்முறையினை சமாளிக்க முடியவில்லை. இதனையடுத்து, 1973 ஆண்டு அமெரிக்க படை தெற்கு வியட்னாமை விட்டு வெளியேறியது.

இந்நிலையில், ஜி20 18-வது உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், வியட்னாமுடன் ஒருங்கிணைந்த மூலோபாய கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறார். வியட்னாம் போர் முடிந்து சுமார் 50 வருட காலம் கழித்து, அந்நாட்டுடன் முக்கிய இரு தரப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. சீனாவின் நீண்டகால நட்பு நாடான வியட்னாம் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் புரிவது சீனாவை அமெரிக்கா தனிமைப்படுத்த எடுக்கும் நடவடிக்கையாகும் என அரசியல் விமர்சகர்கள் தெரிவித்தனர்.

இதனை மறுத்த ஜோ பைடன், “பனிப்போர் காலத்தை கடந்து நாம் சிந்திக்க வேண்டும். அமெரிக்காவின் முன்னேற்றத்திற்கு ஒரு நிலையான, வளரக்கூடிய பொருளாதார தளத்தை அமைத்து கொள்வதற்கு நாங்கள் பல முயற்சிகள் எடுக்கிறோம். சர்வதேச சமூகத்தில் வியட்னாம் ஒரு நட்பான, நம்பிக்கையான மற்றும் பொறுப்புள்ள கூட்டாளி. சீனாவை கட்டுப்படுத்தவோ, தனிமைப்படுத்தவோ அமெரிக்கா விரும்பவில்லை” என்று தெரிவித்தார்.

இஸ்ரேல்

## விந்து, கருமுட்டை இன்றி மனிதக் கரு



ஒரு கரு வளர்ச்சிக்கு விந்து, கருமுட்டை, கருப்பை என்பன அவசியம் ஆனால் இது எதுவும் இல்லாமல் 14 நாட்களேயான மனித கரு போன்ற ‘கரு மாதிரியை’ வெய்ஸ்மேன் இன்ஸ்டிட்யூட்டில் உள்ள விஞ்ஞானிகள் குழு வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது.

இது குறித்துக் கூறிய விஞ்ஞானிகள் குழு, ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட ஸ்டெல் செல்கள் மூலம் மனித கருக்களின் மாதிரிகள் உருவாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது. அதோடு கர்ப்ப பரிசோதனையை சாதகமாக மாற்றிய ஹார்மோன்கள் குறித்த விபரமும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த செயற்கை கரு மாதிரிகள், நஞ்சுக்கொடி, மஞ்சள் கரு, கோரியானிக் சாக் மற்றும் பிற வெளிப்புற திசுக்கள் உள்ளிட்ட இந்தக் கட்டத்திற்கான போதுமான வளர்ச்சியை உறுதி செய்யும் அனைத்தையும் கொண்டிருப்பதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். “இந்த செயற்கைக் கரு தற்போது முதல் மாதத்தில் உள்ளது” என்று பேராசிரியர் ஜேக்கப் ஹன்னா கூறியுள்ளார்.

## கைதிகளை பரஸ்பரம் விடுவிக்க ஒப்பந்தம்




ஈரானில் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். அதுபோல் அமெரிக்காவும் ஈரானியர்களை சிறைபிடித்துள்ளது. அவர்களை விடுதலை செய்ய அமெரிக்கா- ஈரான் இடையே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஈரானில் உள்ள ஐந்து அமெரிக்கர்கள் சிறையில் இருந்து விடுதலை செய்யப்படுவார்கள். அதேபோல் ஈரான் நாட்டைச் சேர்ந்த ஐந்து பேரை அமெரிக்கா விடுதலை செய்ய இருக்கிறது. மேலும், தென்கொரியாவில் இருந்து கத்தாருக்கு 6 பில்லியன் அமெரிக்க டொலரை மாற்றம் செய்யவும் அமெரிக்கா சம்மதம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பா, மத்திய கிழக்கு, ஆசிய வங்கிகள் தொடர்பான அமெரிக்காவின் தடையை மீறியதாகாது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

திண்டுக்கல்



## பற்களை காட்டி அச்சுறுத்தும் குரங்கு

வடமதுரை பகுதியில், கடந்த 2 மாதங்களாக ஒற்றை குரங்கு ஒன்று சுற்றி வருகிறது. இது வீடுகளில் உள்ள பெண்கள் மற்றும் முதியோரை அச்சுறுத்தும் வகையில் அலைந்து திரிகிறது. இதுமட்டுமின்றி கடை மற்றும் வீடுகளுக்குள் புகுந்து தின்பண்டங்களை தூக்கி செல்கிறது. பள்ளி குழந்தைகள் கொண்டு செல்லும் உணவு பொருட்களையும் பறித்து சென்று விடுகிறது. அந்த குரங்கை யாராவது விரட்ட முயன்றால் கூர்மையான பற்களை காட்டி, கடிக்க வருகிறது. இதனால் பொதுமக்கள் பீதி அடைந்துள்ளனர்.

இந்நிலையில் வடமதுரை பொலிஸ் நிலையம் அருகே உள்ள ஒரு மருந்துக்கடைக்குள் புகுந்த அந்த குரங்கு அங்கிருந்த மிட்டாய் டப்பாவை தூக்கியது. இதனைக்கண்ட கடை உரிமையாளர் அதிர்ச்சி அடைந்து, குரங்கை விரட்டினார். ஆனால் அந்த குரங்கு, மிட்டாய் டப்பாவுடன் அங்கிருந்து தப்பி சென்று விட்டது.

கேரளா

## சிறுநீர் கழித்ததைக் கண்டதால் சிறுவனை பழிவாங்கிய உறவினர்



கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள பூவச்சல் பகுதியைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் கடந்த சில நாட்களுக்கு முன்பு கார் விபத்தில் உயிரிழந்துள்ளான். பொலிஸார் இச் சம்பவத்தை விபத்து வழக்காக பதிவு செய்த நிலையில் சிறுவனின் உடல் தகனம் செய்யப்பட்டது.

இந்நிலையில் சிறுவனின் மரணம் குறித்து பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டு விபத்து நடந்த பகுதியில் உள்ள ஒரு வீட்டின் மொட்டை மாடியில் இருந்த சிசிடிவி காட்சிகளை ஆராய்ந்துள்ளனர்.

அந்த சிசிடிவி காட்சியில் வீதியோரம் நின்றுக்கொண்டிருந்த கார், சிறுவன் வந்ததும் அவனை பின் தொடர்ந்து சென்று மோதுகிறது. பின்னர் சத்தம் கேட்டு ஓடி வரும் பொதுமக்கள் படுகாயமடைந்த சிறுவனை மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் காட்சிகளும் அதில் பதிவாகியிருந்தன.

அந்த கார் சிறுவனனின் உறவினர் ஒருவருக்கு சொந்தமானது என்று தெரியவந்துள்ளது. அவர் தலைமறைவாக உள்ளது தெரியவந்துள்ளது. இதனை தொடர்ந்து சிறுவனின் பெற்றோரிடம் இது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தினர்.

அப்போது கடந்த 3 மாதங்களுக்கு முன்பு ஒரு கோயிலின் சுவற்றில் உறவினர் சிறுநீர் கழித்துள்ளார். இதை கண்ட சிறுவன், உறவினரின் குடும்பத்தார் முன்னிலையில் “இவ்வளவு பெரிய ஆளாக வளர்ந்துட்டு, கோயில் சுவரை அசிங்கப்படுத்துகிறாயே” என திட்டியதாக கூறப்படுகிறது.

# ஆசியக் கிண்ணம்: பாகிஸ்தானை வீழ்த்திய இந்தியா

ஆசியக் கிண்ணத் தொடரில், கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து மழை காரணமாக நேற்று முன்தினம் முடிவுக்கு வந்த பாகிஸ்தானுக்கு எதிரான சுப்பர் 4 சுற்றுப் போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:



நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

இந்தியா: 356/2 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: விராட் கோலி ஆ.இ 122 (94), லோகேஷ் ராகுல் ஆ.இ 111 (106), ஷுப்மன் கில் 58 (52), றோஹித் ஷர்மா 56 (49) ஓட்டங்கள்)

பாகிஸ்தான்: 128/10 (32 ஓவ. ) (பந்துவீச்சு: குல்தீப் யாதவ் 5/25, ஜஸ்பிரிட் பும்ரா 1/18, ஹர்டிக் பாண்டியா 1/17, ஷர்துல் தாக்கூர் 1/16)

போட்டியின் நாயகன்: விராட் கோலி



### 60 மீற்றர் ஓட்டப் போட்டியில்

## ரில்பி ரனா சாதனை

வட மாகாண பாடாலைகளுக்கான மாகாண மட்டப் போட்டியில் மன்னார் பொற்கேணி ஜீ.எம்.எம்.எஸ். வித்தியாலய மாணவன் ரில்பி ரனா சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

12 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 60 மீற்றர் ஓட்டப் போட்டியில் 7.7 செக்கன்களில் ஓடி புதிய வட மாகாண சாதனையை நிலை நாட்டியுள்ள இவர் 100 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் முதலிடம் பெற்று சுவட்டு மைதான சம்பியன் பட்டத்தையும் தனதாக்கிக்கொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.



## கல்முனை சாஹிரா மீண்டும் வரலாற்றுச் சாதனை

எம்.எஸ்.எம். ஸாகிர்

கிழக்கு மாகாண பாடசாலைகளு க்கிடையிலான கைப்பந்துப் போட்டியில் 17 வயதுக்குட்பட்ட பிரிவில் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை இரண்டாமிடத்தினைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டதுடன், 20 வயதுக்குட்பட்ட பிரிவில் நான்காமிடத்தையும் பெற்றுக் கொண்டது.

வரலாற்றில் முதன்முறையாக கைப்பந்து போட்டி கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இப்போட்டியில் 51 பாடசாலைகள் பங்குபற்றி இருந்தன.

இவ்விளையாட்டை கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் அறிமுகப்படுத்தி, பயிற்சியளித்த உடற்கல்வி ஆசிரியர் எம்.வை.எம். றகீப், மாணவர்களுக்கு பயிற்சியளித்து அழைத்துச் சென்ற உடற்கல்வி ஆசிரியர்களான எம்.எம். றஜீப், எச்.எம். ஜெமீன் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.எம். ஜப்ரான் ஆகியோருக்கும் போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள், பங்குபற்றி திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் அதிபர் எம்.ஐ. ஜாபிர் உட்பட பிரதி அதிபர்கள், கல்வி சார், சாரா ஊழியர்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் கல்லூரியின் அபிவிருத்தி சங்கத்தினர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துத்துக் கொள்கின்றனர்

### அம்பாறை மாவட்ட வலைப்பந்தாட்டத் தொடர்:

## சம்பியனானது காரைதீவு இராமகிருஸ்ணா இளைஞர்

வி.ரி. சகாதேவராஜா

தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தினால் நடார்த்தப்படும் இளைஞர் விளையாட்டு விழாவின் அம்பாறை மாவட்டத்திற்கான மாவட்ட மட்டப் போட்டிகளில், ஆண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் காரைதீவு இராமகிருஸ்ணா இளைஞர் அணி சம்பியனானது.

அண்மையில் நடைபெற்ற தமது இறுதிப் போட்டியில் வடக்கு பிரதேச செயலக அணியுடன் மோதி வென்றே இராமகிருஸ்னா இளைஞர் அணி சம்பியனாகி தேசிய போட்டிக்குத் தெரிவானது.



### கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே:

## திருக்கோவில் வலயம் பிரகாசிப்பு

### அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலை முன்னிலை

வி. சுகிர்தகுமார்



கல்வியமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கராத்தேயில் திருக்கோவில் கல்வி வலயம் ஐந்து தங்கப் பதக்கங்கள் உள்ளடங்கலாக ஒன்பது பதக்கங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் ஐந்து தங்கப் பதக்கங்களையும், ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலை பெற்றுக் கொண்டு பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாகாண மட்டப் போட்டியிலேயே ஐந்து தங்கப் பதக்கங்கள் தவிர, இரண்டு வெள்ளிப் பதக்கங்கள், இரண்டு வெண்கலப் பதக்கங்களை திருக்கோவில் வலய மாணவர் பெற்றனர்.

வெற்றி பெற்ற மாணவர்கள் அடுத்த மாதம் நடைபெறவுள்ள தேசிய மட்ட போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

மாணவர்களுக்கான பயிற்சிகளை ராம் கராத்தே சங்கத்தின் பிரதம போதனாசிரியர் சிகான் கே. கேந்திரமூர்த்தியின் நெறிப்படுத்தலின் கீழ் பாடசாலை விளையாட்டு பயிற்றுவிப்பாளர் கே. ராஜேந்திரபிரசாத், விளையாட்டு உத்தியோகத்தர் கே.சாரங்கன் ஆகியோர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 13 செப்டெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது